**மேல் மாகாண சபை 2019**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மேல் மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2020 நவம்பர் 18 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 சனவரி 18 ஆம் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மேல் மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதனச் செலவினங்களின் கீழ் மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு, புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 3,523,893,679 செலவினத்தை முன்னைய ஆண்டின் இறுதியளவில் காணப்பட்டிருக்க வேண்டிய ரூபா 8,081,758,371 மீதியுடன் சேர்த்து கணக்கிற்கு எடுக்கும் போது நிதியல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா | அனைத்துச் சொத்துக்களும் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து மாகாண சபைகளின் கணக்குகளிற்கு நிதியல்லாச் சொத்துக்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. ஆண்டின் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு 2019.12.27 ஆம் திகதிய 17/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அறிவுறுத்தல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 11,605,652,050 தொகையாக இருந்திருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,911,333,331 தொகையாக ரூபா 7,694,318,719 ஆல் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஆரம்ப மீதிகளிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | காலப்பகுதியின் ஆரம்பம் மற்றும் இறுதியில் மாகாண சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 8,081,758,371 தொகையான மேல் மாகாண சபையின் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அனைத்துச் சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். | கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஆரம்ப மீதிக்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. தொடர்ந்துவரும் ஆண்டில் அவற்றை கணக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையின் அதிகார எல்லையின் கீழான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினம் ரூபா 61,380,717,789 ஆக காணப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் நிதியக் கணக்கின் நிதிச் செயலாற்றல் கூற்று என்பவற்றின் பிரகாரம் அது ரூபா 61,380,218,434 தொகையாக காணப்பட்டதால் ரூபா 499,355 வேறுபாடொன்றை சுட்டிக்காட்டுகின்றது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | வேறுபாடுகளுடைய அலுவலகங்களை கண்டறிந்து அவ்வாறு காணப்பட்டால் திறைசேரிப் புத்தகங்களுடன் வேறுபாடுகளை திருத்தம் செய்வதற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவினம் ரூபா 7,592,003,271 தொகையாக காணப்பட்ட போதிலும் அது திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் நிதியக் கணக்கின் நிதிச் செயலாற்றல் கூற்று என்பவற்றின் பிரகாரம் ரூபா 7,591,646,612 தொகையாக காணப்பட்டதனால் ரூபா 356,659 வேறுபாட்டை சுட்டிக்காட்டுகின்றது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | வேறுபாடுகளுடைய அலுவலகங்களை கண்டறிந்து அவ்வாறு காணப்பட்டால் திறைசேரிப் புத்தகங்களுடன் வேறுபாடுகளை திருத்தம் செய்வதற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 07 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் நட்டங்கள் மற்றும் பதிவழித்தல்களின் பெறுமதி ரூபா 5,309,144 தொகையாக காணப்பட்ட போதிலும் நிதியக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 540,690 தொகையாக காணப்பட்டதனால் ரூபா 4,768,454 வேறுபாடொன்றை சுட்டிக்காட்டுகின்றது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | பெறுமதிகளை முறையாக கணக்கீடு செய்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (ஈ) | மாகாண சபை அரசாங்க உத்தியோகத்தர்களிற்காண முற்பணக் கணக்கின் 02 விடயங்கள் தொடர்பாக திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்திலுள்ள மீதி ரூபா 1,304,695,679 தொகையாக காணப்பட்ட போதிலும் நிதியக் கணக்கின் பிரகாரம் அத் தொகை ரூபா 1,301,982,859 ஆக காணப்பட்டதனால் ரூபா 2,712,820 இணக்கமின்மையை சுட்டிக்காட்டுகின்றது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அம் முற்பணக் கணக்கின் 02 விடயங்கள் தொடர்பாக திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா 1,308,881,999 தொகையாக காணப்பட்ட அதே நேரம் நிதியக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 1,307,525,750 தொகையாக காணப்பட்டதனால் ரூபா 1,356,249 இணக்கமின்மையை சுட்டிக் காட்டுகின்றது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | சாத்தியமானளவு விரைவாக வேறுபாடுகளை திருத்தம் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 02 திணைக்களங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 134,325,097 வைப்பு மீதியொன்றை திணைக்களப் புத்தகங்கள் காட்டியிருந்த போதிலும் நிதியக் கணக்கின் மீதி ரூபா 143,830,283 தொகையாக காணப்பட்டதனால் மீதிகளிற்கிடையே ரூபா 9,505,786 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. மேலும் வைப்புக் கணக்குகளின் குறித்த 02 விடயங்கள் தொடர்பான திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரிப் புத்தகங்களின் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 141,225,870 மற்றும் ரூபா 138,634,042 தொகைகளாக காணப்பட்டதனால் மீதிகளிற்கிடையே ரூபா 2,591,828 இணக்கமின்மை காணப்பட்டது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | சாத்தியமானளவு விரைவாக வேறுபாடுகளை திருத்தம் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஊ) | 03 திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் வைப்பு பெறுமதி ரூபா 159,613,390 தொகையாக காணப்பட்ட அதேநேரம் நிதியக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 273,628,245 தொகையாக காணப்பட்டதனால் மீதிகளிற்கிடையே ரூபா 114,014,855 இணக்கமின்மை காணப்படுகின்றது. | கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு சரியான மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | சாத்தியமானளவு விரைவாக வேறுபாடுகளை திருத்தம் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (எ) | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதியக் கணக்கிற்கிடையே மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வது தொடர்பாக ஏற்பட்ட செலவினத்தில் ரூபா 613,269,479 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு சரியான மீதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | ஒரு பகுதி சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்த அதே நேரம் ஏனைய பகுதி சொத்துக்களிற்கு உரித்தல்லாத செலவினங்களாக இனங்காணப்பட்டிருந்தது. உரிய உத்தியோகத்தர்கள் வேறுபாடுகளை பரீட்சிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததன் மூலம் சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கம்பஹா மாவட்டத்திலுள்ள தெகதன பத்மாவதி மஹா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தால் பேணப்பட்ட சேமிப்புக் கணக்கிற்கு 2016-2018 காலப்பகுதியின் போது பெறப்பட்ட ரூபா 5,798,188 கூட்டுமொத்தமான அன்பளிப்புக்கள் சார்பில் பெறுவனவுச்சிட்டை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2015-2019 காலப்பகுதியின் போது பழைய மாணவர் சங்கத்தின் குறித்த சேமிப்புக் கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்ட பணங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,952,410 கொடுப்பனவுகளிற்குரிய உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சேமிப்புக் கணக்கின் மூலம் பெறப்பட்ட நிதிகளின் சார்பில் பெறுவனவுச் சிட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்ற அறிவு போதாததன் காரணமாக இது ஏற்பட்டது. |

### 1.2.4 தீர்க்கப்படாத கணக்குகள்

#### (அ) கட்டுநிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளூராட்சி திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதியளவில் கட்டுநிதி எல்லையை விஞ்சி ரூபா 654,768 தொகையை செலவிட்டிருந்தது. பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய ரூபா 317,051,869 கூட்டுமொத்தமான தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகள் காணப்பட்டன. | அனைத்து கட்டுநிதி மீதிகளும் கணக்காண்டின் இறுதியில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | அரசாங்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட வழங்கல்கள் தொடர்பாக சுகாதார திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 317 மில்லியன் தொகையை அறவீடுசெய்வதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பணவனுப்பல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் பொதுச் சேவைகள் ஆணைக்குழு, சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் கடுவெல, கடன, நீர்கொழும்பு மற்றும் மதுரவல பிரதேச செயலகங்களிற்குரியதாக தீர்ப்பனவு செய்யப்படாத பணவனுப்பல் மீதி ரூபா 98,285,128 கூட்டுமொத்தமாகும். | பணவனுப்பல் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | உரிய அலுவலகங்களை கோருவதன் மூலம் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(இ) ஏனைய முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் நிதிகள், முத்திரைகள் மற்றும் நிதிப் பெறுமதியுடைய ஒத்த தன்மையான பொருட்களின் நட்டத்தை பதிவுசெய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற முற்பணக் கணக்கு இல. 10903 இன் கீழ் 2014 ஆம் ஆண்டில் மஹர பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 915,786 முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரிற்கு 2020.08.28 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது. தீர்மானம் பெறப்பட்டதும் முற்பணம் தீர்ப்பனவு செய்யப்படும் என மஹர பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கு மாகாண திறைசேரி உள்ளடங்கிய உரிய நிறுவனஙகளின் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை நிறுவனம் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக முகாமையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 இணங்காமைகள்**

**1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | | |
| (அ) மேல் மாகாண சபை பொதுச் சேவை நடைமுறை விதிகளின் XVIII ஆம் அத்தியாயத்தின் 192(iii) ஆம் பிரிவு | - | 2019 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட சேவைக் காலத்துடன் முப்பத்தைந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடம்மாற்றம் செய்யப்படாமல் நீண்ட காலப்பகுதிக்கு மேலாக மேல் மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் ஒரே வேலையிடத்தில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | விதிகளின் பிரகாரம் இடம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>------------------------------- | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 272(3) | 10,523,896 | 2019 சனவரி தொடக்கம் மார்ச் வரையான 03 மாத காலப்பகுதிக்குரிய களுத்துறை சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பிராந்திய அலுவலகத்தின் ரூபா 10,523,896 பெறுமதியான எழுபத்தாறு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 6,907,698 | 1991 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிலிருந்து முறையே வீடமைப்பு ஆணையாளர் திணைக்களம் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் தொடர்ந்து காணப்பட்ட பொது வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | அரசாங்க வருமானத்திற்கு குறித்த தொகை செலவு வைக்கப்பட்டிருந்த அதே நேரம் மீதி நிறுத்தி வைத்தல் பணமாக விடுவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மேல் மாகாண சபை நிதி ஒழுங்குவிதி 106.7 | 3,475,117 | மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சு மேல் மாகாணம் தவிர்ந்த இரண்டு வெவ்வேறு மாகாணங்களிலுள்ள இடங்களில் மாகாணத்தின் இயலளவு அபிவிருத்தி மற்றும் உள்ளக-மாகாண அபிவிருத்தி தொடர்பான அனுபவங்களை பகிர்ந்துகொள்ளுதல் தொடர்பாக இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. | நிதி ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஈ) | 2019 யூன் 17 ஆம் திகதிய 04/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் V ஆம் பிரிவு | 15,828,875 | இலங்கையின் சார்பில் உத்தியோகபூர்வ பங்குபற்றல் கட்டாயமானதாக காணப்படுவதில்லை என்பதால் உள்நாட்டு நிதிகளை பயன்படுத்தி கருத்தரங்குகள்/ செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களை அனுமதிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எனினும் ஐந்து உத்தியோகத்தர்கள் 2019 ஆகஸ்ட் 27 தொடக்கம் 2019 செப்தெம்பர் 02 வரை வியட்நாமில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குபற்றியிருந்ததுடன் 05 உத்தியோகத்தர்கள் 2019 யூன் 15 – 21 வரையான காலப்பகுதியின் போது ஜப்பானில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குபற்றியிருந்தனர். | | |
| (உ) | 2010 இன் 06 ஆம் இலக்க மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகளின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் | 28,845,738 | திட்டத்தின் பிரகாரம் 56 வயதை விஞ்சிய ஊழியரொருவர் விதிகளின் இரண்டு பட்டியல்களின் பிரகாரம் ஓய்வுபெறும் நேரத்தில் அவரிற்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சம்பளத்தின் 40 சதவீதத்திற்கு சமமான ஓய்வூதியமொன்றிற்கு உரித்துடையவராக உள்ள போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 56 வயதை அடைந்த 114 மாகாண கூட்டுறவு ஓய்வூதிய நிதியத்தின் ஊழியர்களிற்கு அவர்களது சம்பளங்களின் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகைக்கு சமமான ஓய்வூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | விதிகளிற்கிணங்க ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 1.7 போதியளவு அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனைத்து ஆளுநர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களிற்கு முகவரியிட்ட 2017 சனவரி 26 ஆம் திகதிய சனாதிபதி செயலகத்தின் சீஎஸ்ஏ/1/4 ஆம் இலக்க கடிதத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் | கடிதத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

வெளிநாடு செல்வதற்கு 05 நபர்களை விடக் குறைவான குழுவொன்றிற்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்பட வேண்டியதுடன் 05 நபர்களை விடக் கூடுதலான விடயத்தில் 03 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரத்திற்கு மேலதிகமாக சனாதிபதி செயலகத்தின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டும். எனினும் ரூபா 66,785,288 செலவினமொன்றை மேற்கொண்டு மாகாண சபையானது திறைசேரியால் அங்கீகரிக்கப்படாமல் ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ் மாத்திரம் 2018 மற்றும் 2019 காலப்பகுதியின் போது 13 வெளிநாட்டு பயணங்களில் பங்குபற்றுவதற்கு 21 உத்தியோகத்தர்கள் மற்றும் 28 உறுப்பினர்களை அனுமதித்திருந்தது.

## 2. வருமான முகாமைத்துவம்

### 2.1 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1990 இன் 06 ஆம் இலக்க மேல் மாகாண நிதிச் சட்டமூலத்தின் X ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருந்த முத்திரைக் கட்டணங்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129(2)(ஆ) பிரிவு, நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 158(2)(ஆ) பிரிவு மற்றும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 185(2)(இ) பிரிவு என்பவற்றின் பிரகாரம் உரிய உள்ளூராட்சி சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது மேல் மாகாண சபையால் அறவீடு செய்யப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் உரிய உள்ளூராட்சி சபைகளிற்கு அனுப்பப்படும் வரை | கணக்குகளிற்கு கொண்டுவரப்படுவதற்கு முன்னர் வருமானத்திற்கு பதிலாக பொறுப்பொன்றாக இனங்காணப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. பதிலாக மாகாண சபையின் வருமானமொன்றாக முத்திரைக்கட்டணங்கள் கருதப்பட்டிருந்ததுடன் ரூபா 13,488,503,503 மற்றும் ரூபா 17,284,582,079 தொகைகள் முறையே 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. | | |

**2.2 நிலுவை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 30 வருமான குறியீடுகளின் கீழ் மீளாய்வாண்டின் போது மாகாண சபையால் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ் வருமானக் குறியீடுகளில் 16 குறியீடுகள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,981,468,415 வருமானம் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 2,441,053,486 பற்றாக்குறையொன்று ஏற்பட்டதை சுட்டிக்காட்டுகின்றதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,322,890,536 ஆக காணப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் மேலும் ரூபா 1,118,162,950 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த வரிகள் மற்றும் வரியல்லா வருமானம் ரூபா 2,186,264,474 ஆல் குறைவடைந்தமை மற்றும் மீண்டெழும் செலவினம் ரூபா 4,574,852,927 ஆல் அதிகரித்தமை என்பன மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. நியதிச்சட்டக் கணக்குகள்/ நிதியக் கணக்குகள் மற்றும் மாகாண சபை உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு

### 4.1 நியதிச்சட்டக் கணக்குகள்/ நிதியக் கணக்குகள்

#### 4.1.1 பொருளாதார அபிவிருத்தி பணியகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | Wespro பாதுகாப்பு துறை செயற்திட்டத்திலிருந்து பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கிய 04 உத்தியோகத்தர்களிற்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 685,000 மற்றும் ரூபா 780,000 செயற்திட்ட மேற்பார்வை படிகள் மாகாண திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தன. எரிபொருள் படியாக 2013 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்பட்ட குறித்த தொகைகள் 2018 மார்ச் இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் செயற்திட்ட மேற்பார்வை படியாக செலுத்தப்பட்டிருந்தது. | மாகாண திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | Wespro அலுவலக வளாகங்களில் அமுல்ப்படுத்தப்பட்ட சுகாதார சேவைகள் செயற்திட்டத்திற்கு சேவைகளை வழங்குவதற்காக செயற்திட்ட படியாக பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட அங்கீகாரத்துடன் மாத்திரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 905,887 மற்றும் ரூபா 1,505,823 தொகைகள் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளடங்கிய பணியகத்தின் 17 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன. | மாகாண திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 4.1.2 கழிவு முகாமைத்துவ அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவு வழங்கல், வாகன அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் காப்புறுதிக் கட்டண மீளளிப்புக்கள் தொடர்பாக 16 உள்ளூராட்சி சபைகளிடமிருந்து பெறவேண்டியவையாக ரூபா 96,747,745 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 04 உள்ளூராட்சி சபைகள் மாத்திரம் ரூபா 50,170,363 தொகை அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியுள்ளது என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டிருந்தன. | முறையான தொடர்பாடல் மற்றும் முறையான நடைமுறைகளின் கீழ் கடன் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | இச் சேவை அத்தியாவசியமானதாகவும் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வழங்கப்பட வேண்டியதாகவும் உள்ளது. மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | பிலியந்தல, தும்போவிலவிலுள்ள 25 ஏக்கர் பரப்பளவான பகுதியில் அமைந்துள்ள கரடியான கழிவு முகாமைத்துவ முற்றத்தில் கொழும்பு மாவட்டத்திலுள்ள 07 உள்ளூராட்சி சபைகளிடமிருந்து கழிவு அகற்றப்பட்டிருந்த போதிலும் இவ் வசதி தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உரிய அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். | என்பீஆர்ஓ ஆல் வழங்கப்பட்ட இறுதி அறிக்கையின் பரிந்துரைகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 4.1.3 கூட்டுறவு நிதியம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கூட்டுறவுச் சங்கங்களிற்கு கடன்களாக ரூபா 220,194,447 தொகை வழங்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டிய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 416,688,619 | விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை மற்றும் பிணைகள் முன்வைக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

தொகையாக காணப்பட்டது. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை மற்றும் கூட்டுறவு சங்கங்களிற்கு கடன்களை வழங்குவதற்கான பிணைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தவணை தவறிய கூட்டுறவு நிதியத்திற்கான பங்களிப்புக்களை பொருட்படுத்தாமல் கடன்கள் சங்கங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. 05 ஆண்டு மீள்கொடுப்பனவு காலப்பகுதிக்கு உட்பட்டு கூட்டுறவுச் சங்கங்களிற்கு வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 11,585,824 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக தொடர்ந்து காணப்படுகின்றது.

### 4.1.4 கூட்டுறவு கலைப்பு நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கூட்டுறவு கலைப்பு கணக்கிற்குரிய 61 சங்கங்களை கலைப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியளவில் ஒரு சங்கம் மாத்திரமே கலைக்கப்பட்டிருந்தது. | கலைப்பு செயன்முறை துரிதப்படுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | வரையறுக்கப்பட்ட கொழும்பு வடக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கலைப்பிற்காக 35 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக பத்து கலைப்பு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த சங்கத்திற்குரிய நான்கு காணிகள் ஏலமிடப்பட முடியாதிருந்ததால் கலைப்பு செயன்முறையில் குறித்த தாமதம் மீது தாக்கமளித்துள்ளது. | தாமதமின்றி கலைப்புச் செயன்முறை இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொழும்பு கொமர்ஷல் எஞ்சினியரிங் லிமிட்டட் எனும் பெயரையுடைய சங்கத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட்டதிலிருந்து 16 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த போதிலும் கலைப்பு செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி கலைப்புச் செயன்முறை இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஈ) | வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்காத 10 கூட்டுறவுச் சங்கங்கள் காணப்பட்ட போதிலும் அச் சங்கங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள விதிகள் கண்டிப்பாக போதாதுள்ள விடயத்தில் புதிய விதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போதுமான விதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 4.1.5 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான 08 ஆண்டுகளிற்கு தொடர்ச்சியாக மறுக்கப்பட்டிருந்தது. | கணக்குகளிலுள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 235 மில்லியன் பெறுமதியான நிதி உதவியின் கீழ் செயற்திட்டமொன்றை அமுல்ப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமொன்றை முடிவுறுத்துவதற்கு 2006 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக அதன் மீதான 11.3 சதவீத வட்டியுடன் சேர்த்து ரூபா 90 மில்லியன் தொகையான இழப்பீடு செலுத்தப்பட வேண்டுமென 2012 ஆம் ஆண்டில் பிணக்குத் தீர்த்தல் சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதிகாரசபையால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு 2018 | ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் 31 இல் இரத்துச் செய்யப்பட்டதால் 2019 ஆம் ஆண்டில் ரூபா 190.2 மில்லியன் இழப்பீடு செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் வினைத்திறனற்ற ஒப்பந்த நிர்வாகம் காரணமாக குறித்த நட்டம் ஏற்பட்டதிலிருந்து 06 ஆண்டு காலப்பகுதியின் பின்னரும் மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 51, 52.1, 54 மற்றும் 55 இன் பிரகாரம் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதி ஒழுங்குவிதிகள் 76.1.8 மற்றும் 106 இன் கீழான நடைமுறையை பின்பற்ற தவறியிருந்தது. | | |
| (இ) | “ரண் அருண” I, II, III நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வீதிகளை காப்பெற்றிடுதல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குரிய திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாராந்த சந்தை நிர்மாணம் மற்றும் மகப்பேற்று மற்றும் குழந்தை சிகிச்சை நிலையங்கள் உள்ளடங்கலாக 2011-2014 காலப்பகுதியின் போது செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியிடமிருந்து பெறவேண்டியவையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 3,224 மில்லியன் தொகை 2020 ஆகஸ்ட் வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஈ) | திருத்தங்களை மேற்கொண்டிருந்த மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு விட்டிருந்த அஸ்கிரிய, மொறகஹஹென மற்றும் இரத்மலானையிலுள்ள பிரதேச இயந்திரவியல் பொறியியல் அலுவலகங்கள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. 1996 ஆம் | ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நிதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிலிருந்து தொடர்ந்து காணப்பட்ட மீதிகள் அவற்றுள் உள்ளடக்கப்பட்டிருந்தன. மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 51, 52.1, 54 மற்றும் 55 இல் குறிப்பிடப்பட்ட நடைமுறையின் பிரகாரம் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கும் மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 76.1.8 மற்றும் 106 இனை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்த வேண்டியதும் அரசாங்கத்திடமிருந்து அதிகாரசபைக்கு பெறப்பட வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுமான ரூபா 1,297 மில்லியன் மீதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உறுதிப்படுத்தப்படாத விலைப்பட்டியல்களாக காணப்பட்டன. | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஊ) | மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் மற்றும் மாகாண அபிவிருத்தி மானியங்களின் கீழ் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாகாண திறைசேரியால் வழங்கப்பட்ட நிதிகளில் ரூபா 89.56 மில்லியன் தொகை வீதி அபிவிருத்தி மீது பயன்படுத்தப்படாமல் 2019 ஆம் ஆண்டில் ஒதுக்கங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | அபிவிருத்தி நடவடிக்கைகள் மீது நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (எ) | (i) 2019 யூன் 15 – 21 வரை யப்பானிய பல்கலைக்கழகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த ‘‘யப்பானில் வீதி அபிவிருத்தி தொடர்பான தந்திரோபாய முறைமைகள் தொடர்பான சர்வதேச மாநாடு’’ எனும் பெயரினாலான நிகழ்ச்சித்திட்டமொன்றில் நான்கு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். ரூபா | நேடியாக வேலையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 5,178,530 (ஐ.அ.டொலர் 29,000) தொகை கற்கைநெறிக் கட்டணங்களாக உள்ளூர் தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 2,741,374 (ஐ.அ.டொலர் 15,190) தொகை அமைய மற்றும் இணைந்த படிகளாக அந்த 04 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன. எனினும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டிருக்காத 02 உத்தியோகத்தர்களும் அம் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். | | |
| | (ii) நபரொருவரிற்கு ஐ.அ.டொலர் 5,750 படி 05 நபர்களை கொண்ட குழுவிற்கு ஐ.அ.டொலர் 28,750 கற்கைநெறிக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 4 நபர்களை கொண்ட குழு மாத்திரம் அதில் பங்குபற்றியிருந்தது. அதன் பிரகாரம் ஐ.அ.டொலர் 5,750 இற்குச் சமமான ரூபா 1,037,875 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேலதிகக் கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஏ) | ஆரம்ப மனித வளத் திட்டம் தயாரிக்கப்படாமலும் நானாவித செயற்திட்டங்கள் மற்றும் வேலைகளிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு மேலதிகமாக தேவைப்படுகின்ற மனித வளத்தை மதிப்பீடு செய்யாமலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக அதிகாரசபையால் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படைகளில் முறையே 424 மற்றும் 161 நபர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மாத்திரம் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மாகாண வீதிகளை காப்பெற்றிடுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சாக அறியப்பட்ட முன்னாள் அமைச்சிடமிருந்து 2012 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் பெறப்பட்ட இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) சீனாவால் வழங்கப்பட்ட கடன்களின் கீழ் 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட இயந்திரங்களிற்காக அதிகாரசபையால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் ரூபா 40 மில்லியன் சப்ரகமுவ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட சேவைகளிற்காக பெறப்பட வேண்டிய தொகையிலிருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 45.07 மில்லியன் தொகை கழிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டியதாக 2015 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,068,165 தொகை காட்டப்பட்டிருந்தது. | | |
| | (ii) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 ஆண்டும் 04 மாதங்கள் மற்றும் 7 ஆண்டுகளும் 08 மாதங்கள் காலவீச்சிற்கு மேலாக மொறகஹஹெனவில் பொறியில் இருபத்தாறு இயந்திர அலகுகள் திருத்தம் செய்யப்படாமல் காணப்பட்டன. | திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தை வழிநடாத்துவது முகாமைத்துவத்தின் முதன்மை பொறுப்பாக உள்ள போதிலும் அவ்வாறு மேற்கொள்வதற்கு சிவில் சட்டம் பின்பற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க<br><br>(i) 215 நபர்களிற்கு ரூபா 104 மில்லியன் கொடுப்பனவை கோரி களனி – கிரிபத்கொடை வீதியின் அபிவிருத்தி தொடர்பாக 58 தரப்பினர்களால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.<br><br>(ii) வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது பொது ஆதனங்களை சேதப்படுத்துதல், சிவில் சட்டங்களை பின்பற்றத் தவறியமை மற்றும் ஒப்பந்ததாரர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக தவணை தவறுதல் போன்ற காரணங்களினால் அதிகாரசபைக்கு எதிராக பன்னிரண்டு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நிறுவனம் வழிநடாத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**4.1.6 சுற்றுலா சபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 1994 இன் 03 ஆம் இலக்க மேல் மாகாண சுற்றுலா சபை சட்டமூலம் தொடர்பாக விதிகளை உருவாக்கி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | சுற்றுலாச் சபையானது உடன்படிக்கை ஒன்றின் ஊடாக 2020 பெப்ரவரி 20 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 03 ஆண்டு காலப்பகுதிக்கு | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

எதுகலவிலுள்ள நீர்கொழும்பு நீர் பூங்காவின் செயற்பாடுகள், நிர்வாகம் மற்றும் பராமரிப்பை நீர்கொழும்பு மாநகர சபைக்கு ஒப்படைத்திருந்தது.

உடன்படிக்கையின் 03 ஆம் நிபந்தனையின் பிரகாரம் இரண்டாம் தரப்பினர் முதலாம் தரப்பினரின் ஒத்துழைப்பின் கீழ் நீர் பூங்காவின் செயற்பாடுகள், நிர்வாகம் மற்றும் பராமரிப்பை மேற்கொள்வதற்கு மூன்றாம் தரப்பினரிற்கு அதிகாரமளித்திருந்தனர். எனினும் இரண்டாம் தரப்பினர் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் முதலாம் தரப்பினரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் நீர் பூங்காவின் செயற்பாடுகள், நிர்வாகம் மற்றும் பராமரிப்பை மேற்கொள்வதற்கு மூன்றாம் தரப்பினரிற்கு அதிகாரமளித்திருந்தனர். மேலும் உப குத்தகைக்கு விடப்பட்ட நீர் பூங்கா விடயத்தில் மாதாந்த குத்தகை வாடகையின் 30 சதவீதம் உடன்படிக்கையின் 04 ஆம் நிபந்தனையின் பிரகாரம் இரண்டாம் தரப்பினரால் முதலாம் தரப்பினரிற்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும் குத்தகை வாடகையை கணிப்பீடு செய்வது தொடர்பாக மூன்றாம் தரப்பினருடன் இரண்டாம் தரப்பினர் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கையின் பிரதியொன்று சபையால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததால் நீர் பூங்காவின் உபகுத்தகை ஊடாக சபையால் பெறப்பட்ட மாதாந்த குத்தகை வாடகையின் சரியான தன்மை தொடர்பாக சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது.

## 4.2 மாகாண சபை உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து 07 ஏனைய மாகாண சபைகளிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த 25 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 1,856,270 கூட்டுமொத்தமானதுடன் உள்ளூராட்சி சபைகளிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 1,636,785 கூட்டுமொத்தமாகும். எனினும் அம் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 07 மாகாண சபைகளிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த 25 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,856,270 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. 14 உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த 14 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,739,140 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறந்த அல்லது ஓய்வுபெற்ற கம்பஹா வலயத்தின் 30 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,882,869 கூட்டுமொத்தமாக காணப்பட்டது. உத்தியோகத்தரொருவர் ஓய்வுபெறும் போது கடன் மீதி அறவீடு செய்யப்பட வேண்டடியதுடன் இறந்த அலுவலர் ஒருவரிற்காக அவாது கடன் மீதி மரணப் பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்யப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்யத் தவறியதன் காரணமாக கடன் மீதிகளின் குறிப்பிடத்தக்களவு தொகை திரண்டிருந்தது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு முறைமையொன்று முன்வைக்கப்பட வேண்டும். | இறந்த அல்லது ஓய்வுபெற்ற 30 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 906,069 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியுள்ளது. |

**5. செயற்பாட்டு மீளாய்வு**

**5.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (ஆ) | மேல் மாகாண சபையின் நிதிப் பிரிவின் செயற்பாடுகளிற்கு வசதியளிக்கும் நோக்கில் கணனி மென்பொருளொன்றை கொள்வனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,711,500 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் திறைசேரியால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் ஒருங்கிணைந்த கணக்குகள் தொடர்பான தகவல்களை வழங்கும் வசதியை அளித்திருந்தது. இதனால் அத்தகைய செலவினமொன்றை மேற்கொள்வதற்கான தேவைப்பாடெதுவும் காணப்பட்டிருக்கக் கூடாது. | செலவினத்தின் செயற்திறன் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | 2019 ஏப்ரல் 21-27 வரையான காலப்பகுதியின் போது ரஷ்யாவில் நடாத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட பொதுத் துறையில் நல்லாளுகையும் தலைமைத்துவமும் தொடர்பான வெளிநாட்டு கற்கை நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்காக முன்மொழியப்பட்ட பெயர்களிற்குரிய மாகாண சபை உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயணத்தை இரத்துச் செய்யுமாறு கௌரவ சனாதிபதி அறிவித்திருந்த போதிலும் மாகாண சபையின் தலைவர் மற்றும் சபையின் செயலாளர் ரூபா 2,359,800 செலவினத்தை ஏற்படுத்தி பயணத்தை மேற்கொண்டிருந்தனர். | நாட்டின் தலைவரால் வழங்கப்பட்ட கட்டளைகள்/ அறிவுறுத்தல்களிற்கு கீழ்படிவது உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேல் மாகாண அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் விளையாட்டுக்கள் கூறு - 2019 இன் கீழ் 2019 ஒக்தோபர் 27 இல் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவினை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு வீராங்கனைகளிற்கு காலணிகள் மற்றும் பைகளை வழங்குவதற்காக மாகாண கல்வி அமைச்சு 785 விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு வீராங்கனைகள், 57 விளையாட்டு உத்தியோகத்தர்கள், 30 உத்தியோகத்தர்கள் மற்றும் 18 காரியாலய உதவியாளர்களிற்கு ஒவ்வொன்றும் ரூபா 1,300 விலையில் 863 பிரயாண பைகளுடன் சேர்த்து ஒவ்வொன்றும் ரூபா 6,475 விலையில் 890 சோடி காலணிகளை கொள்வனவு செய்வதற்கு 2019 நவம்பர் 04 மற்றும் திசெம்பர் 26 இல் ரூபா 6,884,650 கூட்டுமொத்த தொகையை செலுத்தியிருந்தது. விளையாட்டு விழா முடிவடைந்த பின்னர் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் 2020 சனவரி 17 இல் உள்ளவாறு களஞ்சியங்களில் 636 சோடி காலணிகள் மற்றும் 629 பிரயாண பைகள் காணப்பட்டன. 254 சோடி காலணிகள் மற்றும் 234 பிரயாண பைகள் வழங்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டிருந்த போதிலும் விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு வீராங்கனைகள் தவிர்ந்த நபர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. | உரிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பெம்முல்லவிலுள்ள மருந்தகத்திற்குரிய மருத்துவ உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ விடுதிகள் ரூபா 5,000 மாதாந்த வாடகையின் கீழ் பொலிஸ் பணியிடம் (Police post) ஒன்றை பேணுவதற்காக தற்காலிக அடிப்படையில் 2009 பெப்ரவரி 28 இலிருந்து செயற்படும் வகையில் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பொலிஸிற்கு கட்டிடம் வழங்கப்பட்டதிலிருந்து 10 ஆண்டு காலப்பகுதியொன்றின் பின்னரும் மாதாந்த வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடுதிகளை கையேற்பதற்கு அல்லது குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 5.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமங்களுடன் இணங்காததன் காரணமாக பண்டாரகம, தொடன்கொட மற்றும் அகலவத்தை எம்ஓஎச் அலுவலகங்களில் 2016 ஆம் ஆண்டில் பயன்பாட்டிலிருந்து மீளப்பெறப்பட்ட 22 mg 803,200 எண்ணிக்கையான Ferrous Sulphate tablet குழுசைகள் 2020 சனவரி 19 வரையிலும் கைதவிர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | களுத்துறை கல்வி வலயத்தில் பொதுப்பிட்டிய மஹா வித்தியாலயத்தின் மாணவர்களிற்கிடையே பகிர்ந்தளிக்கும் பொருட்டு 2018 யூன் 13 இல் வழங்கப்பட்ட 28,584 அயன் குழுசைகளில் (iron pills) 18,168 அயன் குழுசைகள் 2020 பெப்ரவரி 14 இல் பாடசாலை வளாகங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மருத்துவ அதிகாரியால் கையொப்பமிடப்பட்ட கடிதத்துடன் பாடசாலைகளிற்கு குழுசைகளை வழங்குமாறு களுத்துறை வலயத்திலுள்ள அனைத்து அதிபர்களும் அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன் வலய அலுவலகத்திற்கு பிரதியொன்று அனுப்பப்பட்டு ஆவணங்கள் முறையாக பேணப்படுகின்றன. |

## 5.3 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கம்பஹா கல்வி வலயத்திலுள்ள தெகதன பத்மாவதி மஹா வித்தியாலயத்திற்காக பஸ் ஒன்றை கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | அதிபரிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பஸ்ஸை கொள்வனவு செய்தல் தொடர்பாக பூர்வாங்க புலனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென 2020.07.07 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (i) 2013 ஒக்தோபர் 30 இல் நடைபெற்ற இப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கூட்டத்தில் பாடசாலைக்கு பஸ் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் கம்பஹா வலயக் கல்விப் பணிப்பாளரால் அது தொடர்பான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பழைய மாணவர் சங்கத்தின் வங்கிக் கணக்கிற்கு ரூபா 6,645,348 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து ரூபா 5,073,400 தொகை ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ii) பஸ்ஸை கொள்வனவு செய்வதற்காக ஆரம்ப கொடுப்பனவு ஒன்றாக 2018 நவம்பர் 19 மற்றும் 30 இல் வாகனங்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையமொன்றிற்கு ரூபா 1,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 2,700,000 கொடுப்பனவு மீதி சார்பில் குத்தகை | அதிபரிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து அவதானிப்புக்களும் அதிபரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. 2020.07.07 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக பூர்வாங்க புலனாய்விற்காக சபையொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியொன்றிடமிருந்து சுழற்சி கடன் வசதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு அதிபர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதிபரின் பெயரின் கீழ் 2019 சனவரி 01 இல் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பஸ் பதிவுசெய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 யூலை அளவில் இன்னொரு பாடசாலைக்கு அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டமை தவிர வேறு எந்தவொரு நடவடிக்கையும் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | பாடசாலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து அதிபரால் ரூபா 700,000 பெறப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பஸ்ஸிற்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் பழைய மாணவர் சங்கத்தின் அன்பளிப்புக்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | பஸ்ஸை கொள்வனவு செய்வதற்காக பாடசாலை அபிவிருத்தி நிதியத்திடமிருந்து ரூபா 700,000 தொகை பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 183,428 தொகை செலுத்தப்பட்டிருந்ததென குறிப்பிட்டு இலக்கங்கள் குறிப்பிடப்படாமல் கையொப்பமிட்ட உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | 2018 ஆம் ஆண்டிற்கான உயர்தர வகுப்புக்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக தரம் 6 இற்கு மாணவர்களை அனுமதித்தல் என்பன தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் சேகரிக்கப்பட்ட ரூபா 2,373,580 தொகை நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை மீறி அதிபரால் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | அதிபரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020.08.14 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 2018 ஆம் ஆண்டில் 191 மாணவர்களில் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 600 தொகை பெறப்பட்டிருந்தமை பெறுவனவு சிட்டை புத்தகங்களின் பிரகாரம் சரிபார்க்கப்பட்டிருந்த போதிலும் பல பெறுவனவுச் சிட்டைகளின் மூலப் பிரதி மற்றும் காபன் பிரதியின் பெறுமதிகள் மாற்றப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் போது அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 4,260 படி 276 ஆறாம் தர மாணவர்களிடமிருந்து ரூபா 1,180,380 கூட்டுமொத்த தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 166,200 தொகை மாத்திரம் பாடசாலை அபிவிருத்தி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. ரூபா 1,014,180 மிகுதி தொகை பௌதீக ரீதியாக காணப்பட்டிருக்காததுடன் அவற்றிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென எந்தவொரு ஆவணச் சான்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது நிதிகள் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தமை தெளிவாக அவதானிக்கப்பட்டிருந்ததுடன் சட்டங்கள் மற்றும் விதிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2017 ஒக்தோபர் 30 இல் நடைபெற்ற மேல் மாகாண சபையின் வணிக ஆலோசனைக் குழுக் கூட்டக் குறிப்புக்களின் பிரகாரம் அலுவலகப் பொறுப்பாளர்களின் அறைகள், அனைத்து குழு அறைகள் (ஏபீசீ) மற்றும் சபையின் மண்டபத்தில் (Chamber of the Council) டிஜிற்றல் மணிக்கூடுகளை நிறுவுவதற்கு மேலதிகமாக சபையின் மண்டபம் மற்றும் சபை செயலாளரின் அறை மற்றும் அலுவலக வளாகங்கள் என்பவற்றில் பிரதான மணிக்கூட்டு முறைமையொன்றை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத் தீர்மானத்திற்கு முரணாக சபையின் முழுக் கட்டிடத்தையும் மேவுகை செய்து ஒவ்வொன்றும் ரூபா 35,387 தொகையான 142 அனலொக் மணிக்கூடுகளும் ஒவ்வொன்றும் ரூபா | தேவையற்ற செலவினங்கள் ஏற்படாமலிருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| 96,471 தொகையான 27 டிஜிற்றல் மணிக்கூடுகளும் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 12,939,346 கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) 2019 ஆம் ஆண்டில் மாகாண அபிவிருத்தி மானியங்களின் கீழ் சமுதாயத்திற்கான பலநோக்கு கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்கான 28 செயற்திட்டங்களிற்காக ரூபா 21,430,290 தொகையை மாகாண வீதி மற்றும் போக்குவரத்து அமைச்சின் கிராமிய அபிவிருத்தி பிரிவு ஒதுக்கீடு செய்திருந்ததுடன் அதிலிருந்து ரூபா 19,907,144 தொகை செலவிடப்பட்டிருந்தது. சமுதாயத்திற்கான பலநோக்கு கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டங்களை அங்கீகரித்து அமுல்ப்படுத்துதல் மற்றும் பலநோக்கு கட்டிடங்கள் மீதான பௌதீக பரீட்சிப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br><br>(i) தெரிவு செய்யப்பட்ட அனைத்து 28 கட்டிடங்களும் கம்பஹா மாவட்டத்திலுள்ள அதே பிரதேச செயலக பிரிவிற்கு மாத்திரம் சொந்தமாக இருந்தன.<br><br>(ii) ஒரு சமுதாய அடிப்படையிலான சங்கத்திற்கு ஒரு நேரத்தில் ஆகக் கூடியது 03 ஒப்பந்தங்கள் மாத்திரமே வழங்கப்பட வேண்டிய போதிலும் சமுதாய அடிப்படையிலான சங்கங்களில் ஒன்றிற்கு 18 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன..<br><br>(iii) சமுதாய அடிப்படையிலான சங்கங்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக சங்கத்தின் உறுப்பினர் | செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படும் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதால் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேல் மாகாணத்தினுள் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. சாத்தியமான ஆகக்கூடிய எண்ணிக்கையான ஒப்பந்தங்கள் மாத்திரமே சமூதாய அடிப்படையிலான சங்கங்களிற்கு வழங்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

ஒருவரிடம் காசோலைகள் கையளிக்கப்பட வேண்டிய போதிலும் வெளிநபர் ஒருவரிற்கும் அமைச்சின் பதவியணி உத்தியோகத்தர் ஒருவரிற்கும் காசோலைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

### 5.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 7(2)(இ) பிரிவின் பிரகாரம் மாகாண சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலாவது சபைக் கூட்டம் நடாத்தப்படும் வரை தலைவர் பதவியை வெற்றிடமாக விடக்கூடாததால் மாகாண சபையின் தலைவரிற்கு மாத்திரம் சம்பளங்கள் செலுத்தப்பட வேண்டும். எனினும் மாகாண சபை இயங்காதிருந்த காலப்பகுதி தொடர்பாக தலைவரின் தனிப்பட்ட பதவியணியினரிற்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 3,972,724 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஒக்தோபர் 12 ஆம் திகதிய அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான சனாதிபதி செயலகத்தின் சீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 ஆம் இலக்க சுற்றறிக்கையில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்காத போதிலும் 2019 ஏப்ரல் 22 – திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு மாகாண சபையின் தலைவரிற்கு மாதமொன்றிற்கு ரூபா 50,000 படி ரூபா 400,000 கூட்டுமொத்தமான வீட்டு வாடகை செலுத்தப்பட்டிருந்த அதே நேரம் ரூபா 25,000 மாதாந்த தொலைபேசி படிக்கு மேலதிகமாக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 56,990 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு | மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

அப்பால் மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் தலைவரின் தனிப்பட்ட பதவியணியினரின் 11 நபர்களிற்கு ரூபா 395,800 கூட்டுமொத்தமான மேலதிக நேரப் படிகள் மற்றும் பிரயாண செலவினங்களும் செலுத்தப்பட்டிருந்தன.

## 5.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 02 அமைச்சுக்கள் மற்றும் 09 திணைக்களங்களால் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த நட்டங்கள் மற்றும் சேதங்களின் பெறுமதி ரூபா 58,281,135 கூட்டுமொத்தமாகும். மீளாய்வாண்டின் போது அதிலிருந்து ரூபா 5,309,144 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்த அதே நேரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 52,971,991 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 5.6 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்

### 5.6.1 நோக்கங்களிற்கு வெளியேயான நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண அபிவிருத்தி மானியங்களின் கீழ் முன்மொழியப்பட்ட 2019 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது பின்பற்றப்பட வேண்டுமென பிரதம செயலாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட கிராமிய அபிவிருத்தி பிரிவிற்கான அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 3,700,000 பெறுமதியான பொது அறிவிப்பு முறைமைகள் (public address systems) 66 மரணச்சடங்கு சங்கங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும் கம்பஹா மாவட்டத்திலுள்ள கடன பிரதேச செயலகத்தின் கிராம சேவையாளர் பிரிவில் மாத்திரம் 02 மரணச்சடங்கு சங்கங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி | பிரதம செயலாளரின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

சங்கமொன்றின் தலைவராக இருந்த அதே நபரிற்கு 03 பொது அறிவிப்பு முறைமைகள் வழங்கப்பட்டிருந்தன. 2 மரணச்சடங்கு சங்கங்களிற்குரிய விண்ணப்பங்களில் ஒரே முகவரி குறிப்பிடப்பட்டிருந்தது.

### 5.6.2 தாமதமான செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 சனவரி – மார்ச் காலப்பகுதியின் போது களுத்துறை மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட ரூபா 132,840,050 பெறுமதியான நூறு செயற்திட்டங்கள் 2019 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்ப்படுத்த தவறியமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | களுத்துறை மாவட்டத்தில் கடுகஹஹெனவின் வெளிநோயாளர் பிரிவுடன் 3 மாடி கட்டிடங்களை நிர்மாணித்தல் ரூபா 66,869,349 தொகையான நிதியேற்பாட்டின் கீழ் 2019 திசெம்பர் 19 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட காலப்பகுதியை நீடித்தல் 2020 யூலை 01 இல் பெறப்பட்டிருந்தது. இதனால் தாமதக் காலப்பகுதி 05 ஆண்டுகளாகும். | நிர்மாணங்களை பூர்த்தி செய்வதை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 5.6.3 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 08 செயற்திட்டங்கள் தொடர்பாக பாணந்துறை பிரதேச செயலகத்தால் பயனாளிகள் பட்டியல்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் ரூபா 1,900,000 பெறுமதியான செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட முடியாதிருந்தன. | பொதுமக்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**5.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெகதன பத்மாவதி மஹா வித்தியாலயத்தின் உயர்தர வகுப்புக்களிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட 213 மாணவர்களிடமிருந்து ரூபா 1,640,100 தொகை சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 284,000 தொகை மாத்திரமே பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் கையில் காணப்பட்டிருந்த தொகை ரூபா 1,356,100 ஆகும். ரூபா 1,181,000 தொகை ஒப்பந்ததாரர் ஒருவரிற்கு வழங்கப்பட்டிருந்ததென வலயப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் வகையில் செலவிடப்பட்ட ரூபா 175,100 மிகுதி தொகை தெளிவுபடுத்தப்படவில்லை. | அதிபரிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிபந்தனைகளிற்கு உட்பட்டு 2020.08.12 இலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிபர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். |

**5.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**5.8.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறியமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்கொழும்பிலுள்ள பிராந்திய பொறியியல் அலுவலகத்திற்கு சொந்தமான கட்டிடத்தின் பின்புற பகுதி நீண்டகாலத்திற்கு மேலாக தனியார் தரப்பினர் ஒருவரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக உடன்படிக்கை எதனையும் நிறுவனம் கொண்டிருக்காததுடன் வாடகை எதுவும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிமைத்துவம் சரிபார்க்கப்பட்டு நிலப்பரப்பு மீட்டெடுக்கப்பட வேண்டும். | மாகாண காணி ஆணையாளர் மற்றும் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் ஆகியோர் உரிமைத்துவத்தை சரிபார்ப்பது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கின்றனர். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொடன்கொட பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள 11 ஏக்கர் மற்றும் 26 பேர்ச்கள் பரப்பளவான அரசாங்க காணியொன்று 1989 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகைதாரரால் மேற்கொள்ளப்பட்ட போலியான உறுதிகளுடன் அக் காணி 20 நபர்களிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | பொறுப்பான தரப்பினர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (இ) | இங்கிரிய பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள 28 ஏக்கர்கள், 02 றூட்கள் மற்றும் 34 பேர்ச்கள் பரப்பளவான காணியொன்று குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. காணி விற்பனை கம்பனியொன்றிற்கு விற்பனை செய்வதற்கு முன்னர் அக் காணிக்காக போலி உறுதிகளை குத்தகைதாரர் தயாரித்திருந்தார். | பொறுப்பான தரப்பினர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஈ) | பதிவு முடிவுறுத்தப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட கொழும்பு வடக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இல. 238 டாம் வீதி, கொழும்பு 12 இல் உள்ள மொத்த காணிப் பகுதி 11.09 பேர்ச்களாகும். ஏலமிடப்பட்ட நேரத்தில் காணியின் மூன்று பேர்ச்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. ஆக்கரமிப்பாளர்களை வெளியேற்றாமல் 2013 செப்தெம்பர் 18 இல் 08.09 பேர்ச்கள் மிகுதி பரப்பளவிற்காக புதிய திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததால் ரூபா 20,417,619 விலைக்கு அக் காணி விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும் குறித்த திட்டம் கொழும்பு மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததால் காணியை கொள்வனவு செய்திருந்த தரப்பினர் வேதனைக்குள்ளாகியிருந்தனர். | வேதனைக்குள்ளான தரப்பினரிற்கு நீதி கொண்டுவரப்பட வேண்டியதுடன் ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

எனினும் 03 பேர்ச்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.8.2 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானத்தை அறவீடு செய்யத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணி ஆணையாளர் திணைக்களத்தின் காணி பணிப்புரைகளின் 201(1) ஆம் பிரிவின் பிரகாரம் விளையாட்டு சங்கங்களின் வருடாந்த குத்தகை வாடகை அபிவிருத்தி செய்யப்படாத காணிப் பெறுமதியின் 02 சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 1991 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்ட இ.பி.கை.6995 காணிக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 125,000,000 பெறுமதியிலிருந்து ½ சதவீத குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க வருடாந்தம் அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை வாடகை பெறுமதி ரூபா 2,500,000 ஆக காணப்பட்ட போதிலும் ரூபா 625,000 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் 30 ஆண்டுகளான காணிக் குத்தகை காலப்பகுதி தொடர்பாக மாகாண சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 56,250,000 கூட்டுமொத்தமாகும். | குத்தகை உடன்படிக்கையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

### 5.8.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி ஒழுங்குவிதி 250 இன் பிரகாரம் பதினெட்டு நிறுவனங்கள் பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதி 250 இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆகையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 நிறுவனங்களின் உப அலுவலகங்களால் மாத்திரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தலைமை அலுவலகத்தால் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஐந்து நிறுவனங்கள் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வை பின்பற்றி கணிப்பீட்டு சபையால் மேற்கொள்ளப்பட்ட பற்றாக்குறைகள், மிகைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | கணிப்பீட்டுச் சபையால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**5.9 பதவியணியினர் நிர்வாகம்**

**5.9.1 பாடசாலை பதவியணியினர்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007 திசெம்பர் 31 ஆம் திகதிய கல்வி அமைச்சின் ஈடி/1/27/1/5/1/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 10 ஆண்டுகளாக ஒரே பாடசாலையில் பணியாற்றியிருந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் மே.மா/கம்பஹா பராக்கிரம மஹா வித்தியாலயம், பண்டாரவத்தையின் 19 ஆசிரியர்கள் 10 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக அப் பாடசாலையில் சேவையாற்றியிருந்தனர். | சுற்றறிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**5.9.2 சுகாதாரப் பதவியணியினர்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களுத்துறை மாவட்டத்தில் டெங்கை தடுக்கும் நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் கள நுளம்பு ஒழிப்பு உதவி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். 2019 ஆம் ஆண்டில் அத்தகைய 110 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 25,675,742 கூட்டுமொத்தமான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் 03 ஆண்டுகளிற்கு முன்னர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த அவ் உத்தியோகத்தர்களின் சேவையை உறுதிப்படுத்துவதற்கு அல்லது ஒப்பந்த காலப்பகுதியை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவர்களது சேவை தொடர்பாக தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**5.10 உள்ளுராட்சி அதிகாரசபைகள் மீதான மேற்பார்வை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேல் மாகாணத்திலுள்ள 49 உள்ளுராட்சி அதிகாரசபைகள் தொடர்பான நிலுவை வருமானங்கள் ரூபா 6,969,680,020 கூட்டுமொத்தமாகும். | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) | 06 உள்ளுராட்சி அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்கள்/ ஏனைய நபர்களிற்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட 25 மிகைக்கட்டணங்கள் தொர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 32,682,529 கூட்டுமொத்த பெறுமதி அறவிடப்பட வேண்டியிருந்தது. | பொறுப்பான நபர்களிடமிருந்து மிகைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2014 ஏப்ரல் 01 ஆம் திகதிய 07/2014 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கொவிட் பெருந்தொற்று காரணமாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்தன. |

### 6.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ‘‘சிரம சவிய’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சு செயலாளரால் 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ரூபா 7,500,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமல் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவுகளில் உள்ளக்கப்பட்டிருக்காத விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக அதிலிருந்து ரூபா 7,436,845 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அக் கொள்வனவுகளில் ரூபா 596,625 பெறுமதியான 35 புல்வெட்டும் இயந்திரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும் 2019 சனவரி 11 இல் மீண்டும் பெறுகை நடைமுறையை பின்பற்றாமல் ரூபா 1,705,500 பெறுமதிக்கு எண்பத்தைந்து புல்வெட்டும் | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நூறு புல்வெட்டும் இயந்திரங்கள் “சிதமு” எனும் பெயரிலான செயற்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட நபர்களுக்கு தலைவரால் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 2017 யூன் 14 இல் இணங்கப்பட்ட பெறுமதியின் 30 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 6,590,273 தொகையான முற்பணத்தை செலுத்துவதன் மூலம் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலைக்கான பிணவறை கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் நிர்மாண கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த கட்டிட நிர்மாணங்களின் காலப்பகுதி கடந்திருந்த பின்னரும் அத்திவார வேலைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் அரைவாசியில் கைவிடப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 16 ஆம் திகதிய பிணைமுறி காசாக மாற்றப்பட்டிருக்காததுடன் ரூபா 2,673,327 தொகையான பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதியை கழித்ததன் பின்னர் ரூபா 3,916,946 மிகுதித் தொகை அறவிடப்பட முடியாதிருந்தது. | பிணைமுறியை காசாக்க தவறிய உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதே போல் ஒப்பந்ததாரரிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

## 6.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக மாகாண | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | |
|---|---|
| சபை அறிந்திருந்த போதிலும் புதிய உலகளாவிய சுட்டிகள் ஊடாக சபை பிரிவில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் சுகாதாரத்தை தரமுயர்த்துவதற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொறுப்புக்கள் குறித்துரைக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |